# 69. குருபரக்கண்ணி

**பூவேறு கோனும் புரோகிதனும் புங்கவரும்**
**நாவார வாழ்த்து நலமே குருபரனே.**

பூ ஏறு கோனும் புரோகிதனும் புங்கவரும்
நாஆர வாழ்த்து நலமே குருபரனே.

தாமரை மலர்மேல் எழுந்தருளும் பிரமதேவனும், இந்திரனும், வானோரும், நா நிறையத் துதிக்கும் நன்மையே குருபரனே. 1

**அண்டபகி ரண்ட மடங்கவொரு பூரணமாக்**
**கண்டபொரு ணீயேயென் கண்ணே குருபரனே.**

அண்ட பகிர் அண்டம் அடங்க ஒரு பூரணமாக்
கண்ட பொருள் நீயே என் கண்ணே குருபரனே.

அண்டங்கள், புற அண்டங்கள் முழுவதிலும் ஒரு பூரணமாகக் காணப்படும் பொருள் நீயே என் கண்ணே! குருபரனே! 2

**என்றுமென துள்ளே யியங்கும் விழுப்பொருளாய்**
**நின்றருளு ஞான நிலையே குருபரனே.**

என்றும் எனது உள்ளே இயங்கும் விழுப்பொருளாய்
நின்று அருளும் ஞானநிலையே குருபரனே.

எக்காலத்தும் என்னுடைய உள்ளக் குகையில் இயங்கும் செம்பொருளாய் நிலைபெற்று அருள்புரியும் ஞானநிலையே குருபரனே. 3

**எல்லாரு நல்லகதி யெய்தவென்று மாமறைகள்**
**சொல்வதுபோ னானுமிங்கே சொன்னேன் குருபரனே.**

எல்லாரும் நல்லதே எய்த என்று மாமறைகள்
சொல்வது போல் நானும் இங்கே சொன்னேன் குருபரனே.

எல்லாரும் நல்ல கதி அடைய வேண்டும் என்று பெரிய வேதங்கள் சொல்வதுபோல் நானும் இங்குச் சொன்னேன் குருபரனே! 4

**கேட்பார் செவிகொடுத்துக் கேளாம லும்போவார்**
**ஆட்படுவார் காண்ப தரிதே குருபரனே.**

கேட்பார் செவிகொடுத்துக் கேளாமலும் போவார்
ஆட்படுவார் காண்பது அரிதே குருபரனே.

கேட்கின்றவர் காது கொடுத்துக் கேட்காமலும் போவார்; உனக்கு அடிமை ஆவாரைக் காண்பது அரிதாகும் குருபரனே! 5

**மோசந் திருட்டு மொழிமாறிப் பேசுதற்கிங்**
**காசைப் படுவோ ரதிகங் குருபரனே.**

மோசம் திருட்டு மொழிமாறிப் பேசுதற்கு இங்கு
ஆசைப்படுவோர் அதிகம் குருபரனே.

இவ்வுலகில் மோசம் செய்தல், திருடுதல், சொன்ன சொல்லை மாற்றிச் சொல்லுதல் போன்ற அயோக்கியத்தனமான செயல் புரிவதற்கு ஆசைப்படுவோர் அதிகம் பேர் குருபரனே! 6

**தேசிக நிந்தனையூன் சேருமுயிர்க் கொலைக்கிங்**
**காசைப் படுவோ ரதிகங் குருபரனே.**

*தேசிக நிந்தனை ஊன்சேரும் உயிர்க் கொலைக்கு இங்கு*
*ஆசைப் படுவோர் அதிகம் குருபரனே.*

குருவைப் பழித்தல், புலால் உணவின் பொருட்டு உயிர்க் கொலை செய்தல் என்பனவற்றுக்கு ஆசைப்படுவோர் அதிகமான பேர் குருபரனே! 7

**நீசர் நுகர்லகரி நெய்யொழுகு மூன்புசிப்புக்**
**காசைப் படுவோ ரதிகங் குருபரனே.**

*நீசர் நுகர் லகரி நெய் ஒழுகும் ஊன்புசிப்புக்கு*
*ஆசைப் படுவோர் அதிகம் குருபரனே.*

இழிந்தோர் புசிக்கும் வெறியூட்டும் பொருள், நெய் ஒழுகும் புலால் உண்டலுக்கும் ஆசைப்படுவோர் அதிகம் பேர் குருபரனே! 8

**பேசு மசத்தியங்கள் பேதகங்கள் குத்திரங்கட்**
**காசைப் படுவோ ரதிகங் குருபரனே.**

*பேசும் அசத்தியங்கள் பேதகங்கள் குத்திரங்கட்கு*
*ஆசைப் படுவோர் அதிகம் குருபரனே.*

பொய்கள், வேறுபாடுகள், வஞ்சனை எனப் பேசப்படும் இழிசெயலுக்கு ஆசைப்படுவோர் அதிகம் பேர் குருபரனே! 9

**மோசப்பொய்ப் பத்திரங்கண் மோசப்பொய்ச் சத்தியங்கட்**
**காசைப் படுவோ ரதிகங் குருபரனே.**

*மோசப்பொய்ப் பத்திரங்கள் மோசப்பொய்ச் சத்தியங்கட்கு*
*ஆசைப் படுவோர் அதிகம் குருபரனே.*

மோசம் செய்து பொய்யான பத்திரங்கள் எழுதுவதற்கும், மோசமான பொய்ச் சத்தியங்கள் செய்வதற்கும் ஆசைப்படுவோர் அதிகம் பேர் குருபரனே! 10

**ஏசற்ற புத்தேள்சொத் தீட்டும் பிறர்பொருள்கட்**
**காசைப் படுவோ ரதிகங் குருபரனே.**

*ஏசு அற்ற புத்தேள் சொத்து ஈட்டும் பிறர்பொருள்கட்கு*
*ஆசைப் படுவோர் அதிகம் குருபரனே.*

குற்றமற்ற தேவர்களின் சொத்துக்கும், மற்றவர் தேடிய பொருள்கட்கும் ஆசைப்படுவோர் அதிகம் பேர் குருபரனே! 11

**வேசை விபசார மெய்யன் பரையிகழ்தற்**
**காசைப் படுவோ ரதிகங் குருபரனே.**

*வேசை விபசார மெய்அன்பரை இகழ்தற்கு*
*ஆசைப் படுவோர் அதிகம் குருபரனே.*

விலைமகள், விபசாரம் செய்தல், உண்மையான அன்பரை இழிவாகப் பேசுதல் ஆகியவற்றிற்கு ஆசைப்படுவோர் அதிகம் குருபரனே! 12

**காசுபணந் தேடிக் கணிகையரைப் புல்குவதற்**
**காசைப் படுவோ ரதிகங் குருபரனே.**

*காசு பணம் தேடிக் கணிகையரைப் புல்குதற்கு*
*ஆசைப் படுவோர் அதிகம் குருபரனே.*

காசு பணம் தேடி விலைமகளைப் புணர்வதற்கு ஆசைப் படுவோர் அதிகம் பேர் குருபரனே! 13

**மாசைரச வாதசித்தி மைவசியங் கைம்மருந்துக்**
**காசைப் படுவோ ரதிகங் குருபரனே.**

*மாசை ரசவாத சித்தி மைவசியம் கைம்மருந்துக்கு*
*ஆசைப் படுவோர் அதிகம் குருபரனே.*

பொன் செய்யும் இரசவாத வித்தை, அட்டமா சித்திகள், மை வசியம், கைம்மருந்து ஆகியவற்றைச் செய்துக்காட்ட ஆசைப்படுவோர் அதிகம் பேர் குருபரனே. 14

**13. கணிகை** = பொதுமகள் = விலைமகள், **நிகண்டுகள்** காண்க

**தாசரையுந் தம்படிற்றுச் சார்நடத்தி யேவவிங்கே**
**ஆசைப் படுவோ ரதிகங் குருபரனே.**

*தாசரையும் தம்படிற்றுச் சார் நடத்தி ஏவ இங்கே*
*ஆசைப் படுவோர் அதிகம் குருபரனே.*

அடியாரையும் தம் வஞ்சனைத் தொழில் சார்பில் நடத்தி ஏவுதற்கு இவ்வுலகில் ஆசைப்படுவோர் அதிகம் குருபரனே! 15

**கூசத்து மங்கைமயல் கூறுங் கதைகளுக்கே**
**ஆசைப் படுவோ ரதிகங் குருபரனே.**

*கூசத்து மங்கைமயல் கூறும் கதைகளுக்கே*
*ஆசைப் படுவோர் அதிகம் குருபரனே.*

நாணமுடைய மங்கையர் மயக்கம்பற்றிக் கூறும் கதைகளுக்கு ஆசைப்படுவோர் அதிகம் பேர் குருபரனே! 16

**மாசற்ற வுன்னைவிட்டு மண்ணைகளை யேவணங்கற்**
**காசைப் படுவோ ரதிகங் குருபரனே.**

*மாசு அற்ற உன்னை விட்டு மண்ணை களையே வணங்கற்கு*
*ஆசைப் படுவோர் அதிகம் குருபரனே.*

குற்றமற்ற உன்னை விட்டுப் பேய்களை வணங்குவதற்கு ஆசைப்படுவோர் அதிகம் பேர் குருபரனே! 17

**தீபந் தனையேற்றிச் செங்கைகுவிப் பார்களருட்**
**டீப மிருக்குநிலை தேரார் குருபரனே.**

*தீபம் தனை ஏற்றிச் செங்கை குவிப்பார்கள் அருள்*
*தீபம் இருக்கும் நிலை தேரார் குருபரனே.*

தீபத்தை ஏற்றி வைத்துச் சிவந்த கையைக் குவிப்பார்கள், அருள் தீபம் இருக்கும் நிலையைத் தெளியார் குருபரனே! 18

**சந்திரனைச் சூரியனைத் தாழ்வார்க ளந்தரங்க**
**சந்திரனைச் சூரியனைச் சாரார் குருபரனே.**

17. **மண்ணை** = பேய்.

*சந்திரனைச் சூரியனைத் தாழ்வார்கள் அந்தரங்கச்*
*சந்திரனைச் சூரியனைச் சாரார் குருபரனே.*

சந்திரனையும், சூரியனையும் வணங்குவோர்கள் உள்ளே இரகசியமாயுள்ள சந்திரனையும், சூரியனையும் சேரார் குருபரனே! 19

**என்றுநனி நாடினுன்னை யீட்டியுள்ள தேட்டமெலாம்**
**குன்றிவிடு மென்பவரு முண்டே குருபரனே.**

*என்று நனி நாடின் உன்னை ஈட்டிஉள்ள தேட்டம்எலாம்*
*குன்றிவிடும் என்பவரும் உண்டே குருபரனே.*

என்றும் நன்கு தேடினால் உன்னைத் தேடி உள்ள தெளிவு எல்லாம் குறைந்துவிடும் என்பவரும் உண்டே குருபரனே! 20

**முத்திநிலைக் கேசிவனை முன்னிநிற்க வேண்டுமிக**
**உத்திக்கின் றென்பவரு முண்டே குருபரனே.**

*முத்தி நிலைக்கே சிவனை முன்னி நிற்க வேண்டும் மிக*
*உத்திக்கு இன்று என்பவரும் உண்டே குருபரனே.*

முத்தி நிலை பெறுவதற்குச் சிவபெருமானைத் தியானித்து நிற்க வேண்டும்; மிகுதியான யோசனைக்கு இல்லை என்பவரும் உண்டே குருபரனே! 21

**உத்தியெனும் பூவாழ்க்கை யுன்னுநரைச் சத்தியரி**
**பத்திசெயப் பன்னுநரு முண்டே குருபரனே.**

*உத்தி எனும் பூவாழ்க்கை உன்னுநரைச் சத்தி அரி*
*பத்தி செயப் பன்னுநரும் உண்டே குருபரனே.*

யோசனை என்னும் உலக வாழ்க்கையை நினைப்பவரைச் சத்தியையும் திருமாலையும் பத்தி செய்யுமாறு தூண்டுபவரும் உண்டே குருபரனே! 22

**ஐந்தொழிலு முன்னிடமென் றாய்ந்தறியா மண்ணையெலாம்**
**இந்தவித மெண்ணி யிடையுங் குருபரனே.**

**22. உத்தி** = யோசனை; 16 – 10–ன் குறிப்புரை காண்க.

ஐந்தொழிலும் உன்னிடம் என்று ஆய்ந்து அறியா மண்ணை எலாம்
இந்த விதம் எண்ணி இடையும் குருபரனே.

ஐம்பெருந் தொழில்களும் உன்னிடம் உள்ளன என்று ஆராய்ந்து அறியாத பேய்கள் எல்லாம் இந்தவிதம் நினைத்துத் தாழ்வடையும் குருபரனே! 23

**இத்தகைய மாந்த ரிருக்குங் குழுவிடைநான்**
**எத்தனைபோ தித்தானு மென்னை குருபரனே.**

இத்தகைய மாந்தர் இருக்கும் குழுஇடை நான்
எத்தனை போதித்தாலும் என்னை குருபரனே.

இத்தகைய அறிவில்லாப் பேய்கள் போன்ற மனிதர்கள் கூடியிருக்கும் கூட்டத்தில் எவ்வளவு போதித்தாலும் என்ன பயன் குருபரனே? 24

**எங்கு மிருக்குமென்பா ரின்னவித மென்றறியார்**
**அங்கிங் கெனவே யலைவார் குருபரனே.**

எங்கும் இருக்கும் என்பார் இன்னவிதம் என்று அறியார்
அங்கு இங்கு எனவே அலைவார் குருபரனே.

இறைவன் எங்கும் இருக்கிறான் என்று கூறுவர்; இன்னவிதத்தில் அவர் உள்ளார் என்பதை அறியமாட்டார்; அங்கு இங்கு என்று பல இடங்களுக்கும் சென்று தேடி அலைவர் குருபரனே! 25

**நோக்கதனை மூக்குநுனி நெற்றிநுதல் வைப்பார்கள்**
**நோக்கினதங் கென்னெனவு நோக்கார் குருபரனே.**

நோக்கு அதனை மூக்குநுனி நெற்றி நுதல் வைப்பார்கள்
நோக்கின்அது அங்கு என் எனவும் நோக்கார் குருபரனே.

கண் பார்வையினை மூக்கு நுனியிலோ அல்லது புருவ மத்தியிலோ வைப்பார்கள்; அங்குப் பார்த்தது என்ன என்பதும் ஆராய்ந்து பார்க்க மாட்டார் குருபரனே! 26

**நோக்கறிவு சிற்றறிவாக் காண்டலினா னோக்குமதைக்**
**காக்குமறி வுண்டெனவுங் கண்ணார் குருபரனே.**

*நோக்கு அறிவு சிறுஅறிவாக் காண்டலினால் நோக்கும் அதைக்*
*காக்கும் அறிவு உண்டு எனவும் கண்ணார் குருபரனே.*

புறக்கண்ணால் பார்க்கும் அறிவு சிற்றறிவாகக் காணப் படுதலினால், பார்க்கும் அதனைக் காக்கின்ற ஓர் அறிவு வேறு உண்டு எனவும் கருதமாட்டார் குருபரனே! 27

**சின்னாட் டொழுதுவினைச் சேர்வாற் றுயருறுகால்**
**உன்னைவிட்டு நிற்பவரு முண்டே குருபரனே.**

*சின்னாள் தொழுது வினைச் சேர்வால் துயர் உறுகால்*
*உன்னை விட்டு நிற்பவரும் உண்டே குருபரனே.*

சில நாட்கள் உன்னைத் தொழுது வினைத் தொடர்பால் துன்பம் அடையும் பொழுது உன்னை விட்டு விலகி நிற்பவரும் உண்டே குருபரனே! 28

**செல்வமிருந் தால்வணங்கிச் செல்வமொழிந் தால்விடுவோர்**
**ஒல்குமிடை வேசியரை யொப்பார் குருபரனே.**

*செல்வம் இருந்தால் வணங்கிச் செல்வம் ஒழிந்தால் விடுவோர்*
*ஒல்கும் இடை வேசியரை ஒப்பார் குருபரனே.*

தம்மிடம் செல்வம் இருந்தால் உன்னை வணங்குவதும், அச்செல்வம் ஒழிந்து போனால் உன்னைத் தொழுதலைவிட்டு விடுகின்றவரை பொருள் கொண்டு வந்தால் புணர்ந்தும், பொருள் இல்லையேல் அவரைவிட்டு விலகியும் இருக்கும் இடை தளரும் வேசியரை ஒப்பவர் ஆவர் குருபரனே! 29

**இன்புதுன்பி ரண்டினுமுன் னேசிலடிக் கன்புடையார்**
**அன்புகிளர் பத்தினிபோ லாவார் குருபரனே.**

*இன்பு துன்பு இரண்டினும் உன் ஏசுஇல் அடிக்கு அன்பு உடையார்*
*அன்புகிளர் பத்தினிபோல் ஆவார் குருபரனே.*

அன்புடையார் இன்பத்திலும் துன்பத்திலும் உனது குற்றமில்லாத திருவடிக்கு அன்பு விளங்கும் பத்தினியைப் போன்றவர் ஆவார் குருபரனே! 30

**இம்மைதனி னல்லோரா யுள்ளா ரிடுக்கணுறின்**
**உம்மைவினை யென்பா ருயர்ந்தோர் குருபரனே.**

இம்மைதனில் நல்லோராய் உள்ளார் இடுக்கண் உறின்
உம்மைவினை என்பார் உயர்ந்தோர் குருபரனே.

இம்மையில் நல்லவர்களுக்குத் துன்பம் வரின், அது முன்பிறப்பில் செய்த வினைப் பயன் என்று உயர்ந்தோர் கூறுவர் குருபரனே! 31

**காரார் பிரவாகம் போலிருக்குங் கன்மமுனைப்**
**பூராவாக் கூடினல்லாற் போமோ குருபரனே.**

கார் ஆர் பிரவாகம் போல் இருக்கும் கன்மம் உனைப்
பூராவாக் கூடின் அல்லால் போ மோ குருபரனே.

கார்காலத்து மழை வெள்ளம்போல் இருக்கும் வினை உன்னை முழுதுமாகச் சேர்ந்தால் அல்லாமல் நீங்குமோ குருபரனே? 32

**கண்ணிலார் வெய்யோனைக் காணா ரவர்போலக்**
**கண்ணுணர்வி லாக்காணார் கண்ணே குருபரனே.**

கண்இலார் வெய்யோனைக் காணார் அவர் போலக்
கண் உணர்வு இலாக் காணார் கண்ணே குருபரனே.

கண் பார்வை இல்லாத குருடர் சூரியனைக் காண மாட்டார்; அவர்போல இரக்க உணர்வு இல்லாதவரும் காணார் கண்ணே குருபரனே! 33

**எட்டுருவி னுங்கலந்தவ் வெட்டினுக்கு மேலானோய்**
**கிட்டுவார்க் கன்றோ கிடைப்பாய் குருபரனே.**

எட்டு உருவினும் கலந்து அவ் எட்டு உருவினுக்கும் மேல் ஆனோய்
கிட்டுவார்க்கு அன்றோ கிடைப்பாய் குருபரனே.

ஐம்பூதங்கள், சந்திரன், சூரியன், உயிர் ஆகிய எட்டு உருவினும் கலந்து, அந்த எட்டு உருவினுக்கு அப்பால் மேலாக

**31. உம்மை** = முற்பிறப்பு

**34. எட்டுரு** = பூதமைந்தும், சூரியனும், சந்திரனும், உயிருமாம்

உள்ள நீ கிடைக்கக் கூடியவர்க்கே அல்லவா கிடைப்பாய் குருபரனே! 34

**அழுதபிள்ளை யேபா லருந்துமது போலத்**
**தொழுதபிள்ளைக் கன்றோ சுகமாங் குருபரனே.**

அழுதபிள்ளையே பால் அருந்தும் அதுபோலத்
தொழுத பிள்ளைக்கு அன்றோ சுகம் ஆம் குருபரனே.

அழுத பிள்ளையே பால் குடிக்கும்; அதுபோல், தொழுத பிள்ளைக்கு அல்லவா இன்பம் கிடைக்கும் குருபரனே! 35

**தேடக் கிடையாத தெள்ளமுதைச் சேரவென்று**
**நாடித் திரிந்தானண் ணாதோ குருபரனே.**

தேடக் கிடையாத தெள் அமுதைச் சேர என்று
நாடித் திரிந்தால் நண்ணாதோ குருபரனே.

தேடினால் கிடைக்காத தெளிந்த அமுதைக் கூட என்று நாடித் திரிந்தால் நெருங்காதோ குருபரனே! 36

**தன்னைப் பொதிந்திருக்குஞ் சட்டகமு மித்தையெனின்**
**அன்னியப்பண் டங்கணிலை யாமோ குருபரனே.**

தன்னைப் பொதிந்திருக்கும் சட்டகமும் மித்தை எனின்
அன்னியப் பண்டங்கள் நிலை ஆமோ குருபரனே.

உயிரைத் தன்னுள் வைத்திருக்கும் உடம்பும் பொய் என்றால், நமக்கு அன்னியமாக உள்ள பொருள்கள் நிலையானவை ஆகுமோ குருபரனே? 37

**பாசபந்த மாகநவில் பாலகரை யீனுமில்லத்**
**தாசைதன்னை யாளினரு ளாமோ குருபரனே.**

பாசபந்தம் ஆக நவில் பாலகரை ஈனும் இல்லத்து
ஆசைதன்னை ஆள்இன் அருள்ஆமோ குருபரனே.

பாசப் பற்றாகக் கூறப்படும் பிள்ளைகளைப் பெறும் வீட்டு ஆசையை ஆண்டால் அருள் வருமோ குருபரனே? 38

**37.** **சட்டகம்** = வடிவம்

**தூண்டிலிரைக் காசைகொண்டு துஞ்சுமச்சம் போன்மடமை**
**பூண்டுலக விச்சையிலோ போவேன் குருபரனே.**

தூண்டில் இரைக்கு ஆசைகொண்டு துஞ்சும் மச்சம் போல்மடமை
பூண்டு உலக இச்சையிலோ போவேன் குருபரனே.

தூண்டில் முள்ளில் வைத்துள்ள இரைக்கு ஆசைப்பட்டு இறக்கும் மீனைப்போல், அறியாமை பூண்டு உலக ஆசையிலோ போவேன் குருபரனே? 39

**தந்த வறிவிருக்கத் தந்தைநீ தானிருக்க**
**எந்தவா வீண்போவே னீசா குருபரனே.**

தந்த அறிவு இருக்கத் தந்தை நீ தான் இருக்க
எந்தவா வீண்போவேன் ஈசா குருபரனே.

நீ கொடுத்த அறிவு இருக்க தந்தை ஆகிய நீயும் உடன் இருக்க, எந்தவாறு பயனில்லாமல் போவேன்? ஈசா! குருபரனே! 40

**படித்தபடி நில்லாப் பதடிகள்போ னானும்**
**நடித்துத் திரிவேனோ நாதா குருபரனே.**

படித்தபடி நில்லாப் பதடிகள் போல் நானும்
நடித்துத் திரிவேனோ நாதா குருபரனே.

படித்தபடி நடக்காத பதர்களைப்போல் நானும் நடித்துத் திரிவேனோ தலைவனே! குருபரனே! 41

**கத்திநிலை விட்டே கதைகளினிப் பேசாமல்**
**சித்தந் தனையடக்கச் செய்யாய் குருபரனே.**

கத்தி நிலை விட்டே கதைகள் இனிப்பேசாமல்
சித்தம் தனை அடக்கச் செய்யாய் குருபரனே.

கத்துகின்ற நிலையை விட்டு வெறும் கதைகளை இனிப் பேசாமல் மனத்தை அடக்க அருள் செய்வாயாக குருபரனே! 42

**இப்பிறவி வீணாகி யின்னுமொன்று வந்தானும்**
**அப்பிறவி யுன்னையலட் டாதோ குருபரனே.**

*இப்பிறவி வீண் ஆகி இன்னும் ஒன்று வந்தானும்*
*அப்பிறவி உன்னை அலட்டாதோ குருபரனே.*

இந்தப் பிறவி பயனில்லாமல் போய் இன்னும் ஒரு பிறவி வந்தாலும், அந்தப் பிறவியும் உன்னைத் தொந்தரவு செய்யாதோ? குருபரனே! 43

**சென்மமெய்து மென்றாலிச் சென்மந் துறவுபுகின்**
**சென்மமெய்தா தென்பதையுந் தேர்ந்தேன் குருபரனே.**

*சென்மம் எய்தும் என்றால் இச்சென்மம் துறவு புகின்*
*சென்மம் எய்தாது என்பதையும் தேர்ந்தேன் குருபரனே.*

பிறவி எய்தும் என்றால் இப்பிறவியில் துறவு கொண்டால், பிறவி எய்தாது என்பதையும் தெளிந்தேன் குருபரனே! 44

**நீநா னெனும்பேத ஞாயமதை நீவிரிப்பா**
**யானாலென் ஞாய மறுமே குருபரனே.**

*நீநான் எனும் பேத ஞாயம் அதை நீ விரிப்பாய்*
*ஆனால் என் ஞாயம் அறுமே குருபரனே.*

நீ வேறு நான் வேறு என்னும் வேறுபடும் நியாயத்தை நீ கூறினாய். ஆனால், என் நியாயம் இல்லாமல் போகுமோ? குருபரனே! 45

**என்வழக்கு நின்வழக்காக் கண்டே னெனக் கருளாத்**
**தன்மைதனக் கோர்ஞாயஞ் சாற்றாய் குருபரனே.**

*என் வழக்கு நின் வழக்காக் கண்டேன் எனக்கு அருளாத்*
*தன்மை தனக்குஓர் ஞாயம் சாற்றாய் குருபரனே.*

என் வழக்கை உனது வழக்காகக் கண்டேன்; அப்படியானால் எனக்கு அருள்புரியாத் தன்மைக்கு ஒரு நியாயம் கூறுவாயாக குருபரனே! 46

**கண்டிறுமாப் புற்றிருக்கக் காட்டலரு ளென்னுமொழி**
**கண்டேனென் மட்டிலதைக் காணேன் குருபரனே.**

கண்டு இறுமாப்பு உற்று இருக்கக் காட்டல் அருள் என்னும் மொழி
கண்டேன் என் மட்டில் அதைக் காணேன் குருபரனே.

கண்டு செருக்குக் கொண்டிருக்கக் காட்டுதல் அருள் எனும் சொல் கண்டேன்; ஆனால் என் அளவில் அவ்வாறு காணவில்லை குருபரனே! 47

**என்னடியார்க் கெஞ்ஞான்று மின்னலழி வேதெனநீ**
**சொன்னசொல் வீணாமோ சொல்லாய் குருபரனே.**

என் அடியார்க்கு எஞ்ஞான்றும் இன்னல் அழிவு ஏது என நீ
சொன்ன சொல் வீணாமோ சொல்லாய் குருபரனே.

என்னுடைய அடியார்க்கு எக்காலத்தும் துன்பமும் அழிவும் இவை ஏது? - என நீ சொன்ன சொல் வீணாகுமோ சொல்வாயாக? குருபரனே! 48

**சிந்தித்த வெல்லாஞ் சிவஞான தேசிகமாப்**
**பந்தித்து வைக்கவருள் பண்ணாய் குருபரனே.**

சிந்தித்த எல்லாம் சிவஞான தேசிகமாப்
பந்தித்து வைக்கஅருள் பண்ணாய் குருபரனே.

நினைத்தவை எல்லாம் சிவஞான ஒளியாய்க் காட்டி வைக்க அருள் புரிவாயாக குருபரனே! 49

**அண்ண லருணகிரி யன்புக் கிரங்கியவோர்**
**தண்ணளிதந் தாளெனையுந் தாய்போற் குருபரனே.**

அண்ணல் அருணகிரி அன்புக்கு இரங்கிய ஓர்
தண்ணளி தந்து ஆள் எனையும் தாய்போல் குருபரனே.

பெரியோன் ஆகிய அருணகிரிநாதரின் அன்பிற்கு இரங்கி ஒரு குளிர்ந்த அருளைத் தந்தவாறு, என்னையும் தாய்போல் ஆண்டுகொள்வாயாக குருபரனே! 50